# பலாகல பிரதேச சபை

# அனுராதபுரம் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 திசெம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பலாகல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய 05 வருடங்களுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 117,025 கூட்டுத்தொகையான கணக்காய்வுக் கட்டணம் மற்றும் மீளாய்வர்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணம் என்பவற்றிற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வூதியப் பங்களிப்பாக செலுத்த வேண்டிய ரூபா 323,164 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) பதிவேடுகளுக்கிடையே வேறுபாடுகளை சரிசெய்வதற்காக வேலைக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 4,252,021 தொகை மற்றும் வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 3,450,002 தொகை முறையே திரண்ட நிதியத்தில் வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த சீராக்கங்களின் தேவை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 79,198,654 கூட்டுத்தொகையான 11 சொத்து விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,215,912 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,095,028 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 180 இன் பிரகாரம் காசு அல்லது களஞ்சியத்திற்குப் பொதுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள் அல்லது வருமானம் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களினால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 400 | 529 | - |
| (ii) | வாடகை | 1,008 | 734 | 274 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 105 | 174 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 7,714 | 5,627 | 2,087 |

## 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 408,191 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 946,540 |

## 2.3.3 தொலைபேசிக் கோபுரக் கட்டணம்

அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 05 தொலைபேசி கோபுரங்களுக்காக கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3.4 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் போது சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்காமையினால் 28 முயற்சிகளிலிருந்து அறவிட வேண்டியிருந்த சுற்றாடல் அனுமதிப்பத்திர வருமானமான ரூபா 84,000 இழக்கப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி சேர்க்கப்பட்ட 07 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 721,142 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது தனியார் நிறுவனமொன்றிற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 98,000 தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்